# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

## Sessions Case No. 25/2022

| | |
|---|---|
| Deposition of witness for | : PW8 |
| Name | : முத்துவேல் |
| Father's / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 4th day of November 2024.

**<u>முதல் விசாரணை</u>:-**

நான் தற்போது செட்டிப்பட்டியில் குடியிருக்கிறேன். இதற்கு முன்பு வடுவன்காடு, மாவெளிப்பாளையத்தில் வாடகை வீட்டில் குடியிருந்து வந்தேன். லாரி பாடி பில்டர் வேலை செய்து வருகிறேன். இறந்துபோன சேகர் எனக்குத் தெரியும். 1ம் எதிரியை ஒரு முறை பார்த்துள்ளேன். மற்ற எதிரிகளை எனக்குத் தெரியாது. 2021ம் வருடம் கொரோனா காலத்தில் எங்கள் வீட்டை தாண்டி சேகர் பால் எடுத்துச் சென்று வருவார். கொரோனா காலம் என்பதால் பால் விற்பனை ஆகவில்லை. பால் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சேகர் என்னிடம் கேட்டார். நாங்கள் சரி என்று சொன்னோம்.

அடிக்கடி எனது பட்டறைக்கு சேகர் வருவார் என்னிடம் பேசிக் கொண்டிருப்பார். லேட்டாகிவிட்டது வீட்டிற்கு போ என்று சொன்னால் தனக்கும், தனது அப்பாவுக்கும் சண்டை என்று சொல்வார். என் மகனுக்கு பீஸ் கட்டுவதற்காக சேகரிடம் கைமாற்றாக ரூ.25000/- வாங்கினேன். மறுபடி ஆஸ்டல் பீஸ்க்காக சேகரிடம் ரூ.25000/- வாங்கியிருந்தேன். என்னிடம் பணம் வரும்போது திருப்பி தருவதாக அவரிடம் சொன்னேன். அவர் கடைக்குச் சென்றால் மளிகை சாமான்கள் எங்களுக்கு வாங்கிக் கொடுப்பார். அதற்கான தொகையை கொடுத்துவிடுவேன். 03.03.2021ம் தேதி என் மகளுக்கு உறவுமுறை அழைப்பாற்காக மொடக்குறிச்சி சென்றிருந்தேன். போகும்போது ரூ.1000/- வேண்டுமென்று போன் செய்து சேகரிடம் கேட்டேன். அவர் பணம் இல்லை என்று சொல்லிவிட்டார். மறுபடியும் வீட்டிற்கு வந்துவிட்டேன். 6ம் தேதி போலீசார் என்னை அழைத்து சேகர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

போலீசாரிடம் சேகர் எனக்கு பள்ளி படிக்கும்போதிருந்தே தெரியும் என்று சொல்லியுள்ளேனா என்றால் 5, 6 வருடம் தெரியும் என்று சொல்லியுள்ளேன். சேகர் என் கடைக்கு காலை சுமார் 10 மணி வாக்கில் வருவார். அவர் ஒரு மணி நேரம் அல்லது 2 மணி நேரம் பேசிவிட்டு கிளம்பிவிடுவார். சேகர் மாலை 5 அல்லது 6 மணிக்கு பால் எடுத்து வருவார். சங்ககிரி வந்தால் என்னிடம் பேசுவார். மாலை நேரத்தில் சேகர் என் பட்டறையில் சுமார் 10 நிமிடம்தான் இருப்பார். சேகர் இரண்டு நேரமும் எங்கள் வீட்டிற்கு பால் கொடுப்பார். சில நாட்களில் ஒரு நேரம் கொடுப்பார். என் மனைவி அ.சா.7 க்கும் சேகருக்கும் அழைபேசியில் தவறான பேச்சுவார்த்தை இருப்பது எனக்கு எவ்வளவு நாளாக தெரியும் என்று சொன்னால் அவ்வாறு எந்த பேச்சுவார்த்தையும் இல்லை. நான் இருந்தால்தான் சேகர் வந்து பேசுவார். நான் முதல் விசாரணையில் சேகர் எங்கள் வீட்டிற்கு மளிகை சாமான் வாங்கி கொண்டுவந்து கொடுப்பார் என்றும், சிலமுறை பணம் பெற்றுக் கொள்வார் என்றும், பலமுறை பணம் கொடுத்தால் வேண்டாம் என்று சொல்லிவிடுவார் என்றும் சொல்லியுள்ளேன் என்றும், அதனால் சேகருக்கும், என் மனைவிக்கும் தகாத உறவு முறை இருக்கிறது என்றும் சொன்னால்

சரியல்ல. பலமுறை சேகரிடம் பணம் வாங்கியுள்ளதால் நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 03.03.2021 அன்று சேகரிடம் மாலை 7.30 மணிக்கு ரூ.1000/- தொலைபேசி மூலம் பணம் கேட்டேன். அப்போது சுமார் 2 நிமிடம் பேசினோம். சேகருக்கும், 1ம் எதிரிக்கும் நடைபெற்றதாக நான் சொல்லும் சண்டை தொடர்பாக காவல்நிலையத்தில் சேகர் புகார் எதுவும் கொடுத்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது. சேகர் சொல்லித்தான் அவருக்கும் அவரது தந்தைக்கும் சண்டை என்று தெரியும். மற்றவர்கள் யாரும் அதுபற்றி என்னிடம் எதுவும் சொல்லவில்லை.

ஒம்/- L. கலைவாணி
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.